# ஈழத் தமிழர்களின் வேளாண்மைத் தொழில்சார் வழக்காறுகள்

*கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்*
சிரேஷ்ட விரிவுரையாளர்
மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

ஈழத் தமிழர்கள் தனித்துவமான பண்பாட்டு அம்சங்களைக் கொண்டவர்கள். அதேவேளை பிரதேச அலகுகள் சார்ந்த தனித்துவ பண்பாடுகளைக் கொண்டவர்களாகவும் அவர்கள் விளங்குகின்றனர். இத்தகைய பிரதேச அலகுசார் பண்பாட்டிற்கு ஈழத்தின் கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள மட்டக்களப்புப் பிரதேச விவசாயத் தொழில் சார்ந்த வழக்காறுகள், சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். ஈழத்தமிழர்களின் பண்பாட்டுத் தொகுதியில் முதன்மைக் கூறுகளாக அமையும் இந்த வழக்காறுகளைப் பதிவு செய்வதாகவும் அவற்றின் சமூகப் பெறுமானம், சிதைவு என்பன பற்றிப் பேசுவதாகவுமே இக்கட்டுரை அமைகின்றது.

ஒரு சமூகத்தின் பண்பாடு, மரபுகள் முதலான மேற்கட்டுமானங்களை அச்சமூகத்தின் அடிக்கட்டுமானமாகிய பொருளாதாரமே நிர்ணயிக்கின்றது என்பது மார்க்சியத் தத்துவமாகும். அந்தவகையில் மட்டக்களப்புத் தமிழ் மக்களின் பண்பாட்டம்சங்களைப் பெரிதும் பாரம்பரிய விவசாயச் செய்கை பாதித்துள்ளதைக் காணலாம். ஒருவகையில் மட்டக்களப்புத் தமிழர்களின் பண்பாட்டை "விவசாயப் பண்பாடு" என்று கூறலாம். அவர்களின் பண்பாட்டின் தனித்துவப் பண்புகள் பற்றிப் பேசும்போது அதிலே விவசாயச் செய்கை சார்ந்த பல்வேறு வழக்காறுகள் முக்கியம் பெறுகின்றன.

மட்டக்களப்புத் தமிழர்களின் பாரம்பரிய விவசாயச் செய்கை மத நம்பிக்கைகளோடும், கலை வெளிப்பாட்டுடனும் நெருங்கிய தொடர்புடையது. வேளாண்மைச் செய்கையின் முக்கிய பணிகளை மத வழிபாட்டுடன் தொடங்குவதை அவர்கள் மரபாகக் கடைப்பிடித்து வந்தார்கள். இந்த வழிபாடுகளில் குறித்த வயற்காரர் மட்டுமன்றி பக்கத்து வயற்காரர்களும் பங்குகொண்டார்கள். அந்தவகையில் வேளாண்மைச் செய்கையின் ஆரம்ப வேலைகள் "ஏர்நாள்" எனப்படும் சுபதினமொன்றில் வயலினுள் பிள்ளையாருக்கு மடை வைத்து வணக்கம் செலுத்தி கொத்துதல், ஏர்புட்டுதல் முதலான வேலைகளை ஆரம்பிப்பர். இந்நிகழ்வை "ஏர்நாளுக்குக் கொத்துதல்" என்றும் கூறுவர்.

அவ்வாறே விதைக்கும் காலம் நெருங்கியதும் “விதைநாள்” எனப்படும் சுபநாளில் வயலில் மடை வைத்துப் பொங்கல் பொங்கிப் படைத்து வணக்கம் செலுத்திப் பின் மடையில் உள்ள நெல்லை எடுத்து, குறித்த சிறு பகுதியில் விதைப்பர். குறித்த வயற்காரர்கள் எல்வோரும் சேர்ந்து ஒன்றாகப் பொங்கி விதைநாள் வழிபாட்டை நடத்துவதுமுண்டு. வேளாண்மையை இயற்கையில் இருந்தும், நோய்களில் இருந்தும் பாதுகாத்து நல்ல விளைவை வேண்டுவதாக இந்த வழிபாடுகள் அமையும்.

நிலத்தைப் பண்படுத்துவதற்கு புரட்டுக் கலப்பை, உல்லுக் கலப்பை, பல்லுக் கலப்பை, முதலான கலப்பை வகைகள் பயன்படுத்தப்பட்டன. இவை நிலத்தின் தன்மைக்கு ஏற்ப பயன்படுத்தப்பட்டன. கலப்பைகளை எருது மாடுகளில் பூட்டி உழுவதே இங்கு பெருவழக்காகும். உழும்போது ஏர்ப்பாடல்களைப் பாடி அலுப்பைப் போக்குவது வழக்கமாகும். பெரும்போகம் பெரும்பாலும் புழுதி விதைப்பாகவும், சிறுபோகம் சேற்று விதைப்பாகவும் அமையும். பெரும்பாலும் ஆரம்ப உழவு (நிலையெடுப்பு), இரட்டிப்பு, மூன்றாம் உழவு என மூன்று உழவுகளை மேற்கொள்வர். புற்கள் மிகுதியாக உள்ள பள்ள நிலங்களுக்குப் பெரும்பாலும் இரட்டிப்பின் பின்னர் தண்ணீரைத் தேக்கி, எருமை மாடுகளைப் பிணைத்து இரவுவேளையில் அவற்றால் மிதித்துப் பண்படுத்துவர். இது “மிதிப்பு” எனப்படும். இவ்வேளைகளிலும் ஏர்ப் பாடல்களைப் பாடுவதுண்டு. சேற்று விதைப்பின்போது பல்லுக்கலப்பைகளால் பண்படுத்திய பின் முளைக்கவைத்த நெல்லை விதைப்பர். புழுதி விதைப்பின் போது, கலப்பையினால் பண்படுத்தப்பட்ட வயலில் முளைக்கவைக்காத விதைநெல்லை விதைத்துப் பின் உல்லுக் கலப்பை அல்லது பல்லுக்கலப்பையினால் நெல்லை உழுது விடுவர். இது “நெல் மறுத்தல்” எனப்படும்.

வேளாண்மை கதிரான பின்னர் பூச்சி, புழுக்களதும் நோய்களதும் தாக்கம் அதிகரிக்கும். இச்சந்தர்ப்பத்தில் “வயலைக் காவல் செய்தல்” என்ற சடங்கு இடம்பெறும். அதாவது, தம் ஊரிலுள்ள ஆலயத்தில் அதிகாலைப் பூசையில் மந்திரிக்கப்பட்ட தீர்த்தம் அல்லது இளநீரைக் கொண்டுவந்து அந்நீரை வயலைச் சுற்றி வேப்பம் பத்திரத்தினால் தெளித்துவிட்டு, வயலின் எல்லையில் இளநீர் கோம்பையை ஒரு கம்பின் மீது குத்திவிடுவர். சில இடங்களில் குறித்த கோயில் கப்புகனாரே தீர்த்தத்தைக் கொண்டுசென்று வயலைக் காவல் பண்ணுவதுமுண்டு. இப்புனித நீரால் செய்யப்படும் காவல் பயிரைத் தாக்கும் பூச்சி புழுக்களையும், நோய்களையும் வயலுக்குள் நெருங்கவிடாது என்பது இவர்களின் நம்பிக்கையாகும்.

இவ்வாறே பெரும்போகச் செய்கையின் போது மழை ஒறுத்தால் கொம்பு முறி, பிள்ளையாரைத் தண்ணீரில் புதைத்தல் ஆகிய இரு சடங்குகளைச் செய்வர். குறித்த வயல்களுக்கு மத்தியில் விவசாயிகளால் வணங்கப்பட்டு வருகின்ற தெய்வக் கல்லை அருகிலுள்ள ஆற்று நீரினுள் புதைத்தவிடுகின்ற மரபு பின்பற்றப்பட்டு வந்தது. மழை பெய்த பின்னர் அப்பிள்ளையார் கல்லை எல்லோரும் சேர்ந்து வெளியெ எடுத்து, பொங்கலிட்டு பூசை செய்வர். இவ்வழக்கம் வேறு இனக்குழுமங்கள் மத்தியிலும் மரபுவழியாக இருந்துவந்த மழைக்கல் வழிபாட்டு மரபுடன் நெருக்கமான தொடர்பு கொண்டள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே மழை வேண்டிக் கண்ணகி அம்மனை வேண்டி கொம்புமுறி என்ற சடங்கையும் நிகழ்த்துவர்.

கதிர் முற்ற ஆரம்பித்ததும் (தலக்கதிர் பழுத்தல்) “கதிர்கண்ட பொங்கல்” என்ற பொங்கல் வழிபாட்டை வயலினுள்

செய்வர். குறித்த வயல்காரர்களெல்லாம் சேர்ந்து பொங்கி இவ்வழிபாட்டைச் செய்வதுமுண்டு. வேளாண்மை கதிரான பின்னர் காவலில் அதிக கவனம் செலுத்துவர். வேளாண்மைக் காவலின்போதும் சில மரபுகள் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வந்தன. யானை, பன்றி, மாடுகள் முதலான மிருகங்களிடமிருந்து மட்டுமன்றி, நெல் உண்ணும் பறவைகளிடமிருந்தும் பயிரைக் காப்பாற்ற அவர்கள் காவல் இருந்தனர். மிருகக்காவல் பெரும்பாலும் இராக் காலங்களிலேயே இடம்பெற்றது. ஒவ்வொரு வயலினுள்ளும் உயரமான பரண்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மேலிருந்து விடியவிடியக் காவல் இருப்பர். அப்போது தம் நித்திரையையும் அலுப்பையும் போக்குவதற்காக கவி என்று சொல்லப் படுகின்ற வாய்மொழிப் பாடல்வகையை ஒவ்வொரு வயற் காவலாளியும் மாறிமாறிக் கூற்றுமுறையாக பாடுகின்ற மரபு முன்னர் இருந்துவந்தது. பெரும்பாலும் காதல்/ பாலியல் உணர்வுகளை வெளிப்படுத்து கின்ற இத்தகைய கவிகள் ஆணும் பெண்ணும் மாறிமாறிப் பாடுகின்ற அமைப்பை உடையது. ஒரு வயற்காரன் ஆணாகவும் மற்றைய வயற்காரன் பெண்ணாகவும் தம்மைப் பாவனை பண்ணிக்கொண்டு இத்தகைய கவிகளை உரத்த தொனியிலே பாடியமை பற்றி பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் (1980) குறிப்பிடுகின்றார்.

குருவிக் காவலுக்காக உயரமான பரண்கள் அமைத்து அதன் மேலிருந்து ஒலியெழுப்பி குருவிகளை விரட்டியதோடு வயலின் பல பக்கங்களிலும் சகடைகள் கட்டி அவற்றிலிருந்து ஒலியெழுப்பியும் அவற்றை விரட்டினர். இரவுக் காவலுக்கு என்று சம்பளத்திற்கு கூலியாளை ("குருவிகாகாரன்") அமர்த்துவதும் வழக்கமாகும்.

வேளாண்மை வெட்டுவதிலே பெரும்பாலும் ஆண்களே ஈடுபடுவதுண்டு. வேளாண்மை வெட்டுபவர்களுக்கு "பங்கு" எனப்படும் பரப்பின் அடிப்படையிலே வேளாண்மை பிரித்துக் கொடுக்கப்படும். வேளாண்மை வெட்டுபவர்கள் அருவிவெட்டுப் பாடல்களைப் பாடித் தம் களைப்பைப் போக்கினர். வெட்டி மறுநாள் கதிர்களைக் கட்டுவதற்குத் (உப்பட்டி கட்டுதல்) தொடங்குவர். வயலின் விசாலத்துக்கு எற்ப குழுக்களாகப் பிரிந்து கட்டும், தூக்கும் பணிகளைக் கூட்டுணர்வுடன் மேற்கொள்வர். இவ்வேளையில் தொண்டூழியம் செய்த சலவைத் தொழிலாளி, நாவிதர் ஆகியோருக்கு அவர்கள் விரும்பும் ஒவ்வொரு கட்டை வழங்குவது மரபாகும். களவெட்டியில் சூடு வைப்பதற்கு ஒருவரும் அதனைச் சரிபார்ப்பதற்கு மற்றொருவருமாக நின்று சூடு சரியாத வண்ணமும் நீர் உட்செல்லாத வகையிலும் அழகு மிக்கதாகவும் சூட்டை வைப்பர். சூடு வைப்பதை அவர்கள் ஒரு கலையாகக் கருதுவர்.

களவெட்டி எனப்படும் சூடடிக்கும் இடத்தை விவசாயிகள் புனிதம் மிக்க இடமாகக் கருதுவர். அப்புனிதத்தைப் பேணுவதற்காக அவர்கள் பல கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவர். அங்கு பாதணி அணிந்து செல்லுதல், கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துதல், மச்சம், மாமிசம் உண்ணுதல் என்பவற்றைத் தவிர்ப்பர். அத்தோடு தீட்டான பெண்கள் செல்வதையும் தவிர்ப்பர். வேளாண்மை செய்யும் வரவை ஒன்றைக் களவெட்டி வரவையாக தொடர்ந்து பாவிப்பர். அது சற்று உயரமான நீர்த்தன்மை காய்ந்து விடக் கூடிய இடமாகவும், வன்மையான சமதரையாகவும் பேணப்படும். சிலர் களவெட்டி வரவையினுள் வேளாண்மை விதைப்பதைத் தவிர்பதும் உண்டு. சூடு வைக்கும் முன்னர் அல்லது அதன் பின்னர்

அவ்விடத்தில் உள்ள புற்கள் எல்லாம் அகற்றப்பட்டு நெல்மணிகள் நிலத்தில் புதையாதவண்ணம் அவ்விடம் ஒழுங்கு செய்யப்படுவதோடு களவெட்டியின் மையத்தில் “அரக்குப் புதைத்தல்” என்ற நிகழ்வு நடைபெறும். இது களவெட்டியைக் காவல் செய்கின்ற சடங்காக அமையும்.

சூடு போடுவது பிற்பகல் சுமார் 5 மணிக்குப் பின்னரே ஆரம்பிக்கப்படும். சூடு மிதிப்பதற்காக எருமை மாடுகளைப் பயன்படுத்துவர். இவற்றை வாரிக்காலன் என்பர். சூடு மிதிப்பதற்கு பயிற்றப்பட்ட அவற்றை ஒரு ஒழுங்கு முறையின்படி கயிற்றினால் பிணைப்பர். அம்மாட்டுத் “தொடுவையை” கதிர்களை மிதிப்பதற்காக சாய்க்கும்போது களவெட்டியின் நடுவில் நின்று சுழலும் மாட்டை அரக்கு என்றும், விளிம்பில் நின்று சுழலும் மாட்டை வாட்டி என்றும் அழைப்பர்.

சூட்டைப் பிரித்துத் தள்ளுவதற்கு முன்னர் வயல் சொந்தக்காரர் சூட்டின் மேலே வேலைக்காரனோடும் தேங்காய், பூ முதலியவற்றுடனும் சென்று சூட்டின் முடியில் பூ, தேங்காய் என்பவற்றை வைத்து பூமாதேவியை நினைத்து மூன்று முறை வலம்வந்து கையிலே உள்ள வேலைக்காரன் கம்பினால் ஓங்கித் தேங்காய் இரு பாதிகளாக உடையும் வண்ணம் அடிப்பர். இதன்பின் அவர் சுட்டின் மேற்பகுதியை இழுத்து கீழே போடத் தொடங்க ஏனையவர்களும் சூட்டிலே ஏறி சூட்டைத் தள்ளிக்குவிக்கும் பணியிலே ஈடுபடுவர். முற்றாகச் சூடு குவிக்கப்பட்ட பின்னர், மாட்டு தொடுவை குவியலிலே ஏற்றப்பட்டு சுற்றிச் சுற்றி சாய்க்கப்படும். இச்செயற்பாடு அதிகாலை வரை தொடரும். மாடுகளைச் சாய்க்கும்போது அவற்றை மிக அன்பாக நடத்துவதோடு அவற்றை உற்சாகப்படுத்து வதற்காகவும் தம் களைப்பு, நித்திரையைப் போக்குவதற்காகவும் பொலிப்பாடல்கள் பாடுவது முக்கிய மரபாகும். இப்பாடல் இறை சிந்தனையுடன் கூடியதாக அமையும். முக்கியமாக பொலி வளத்தை வேண்டுவதாக அது பாடப்படும்.

விடிவதற்கு முன்னர் நெல் மணிகள் நன்கு உதிர்ந்த பின்னர் பொலிக்கொடி எனப்படும் வைக்கோலை வேலைக்காரனால் வாட்டி களவெட்டிக்கு வெளியே சுற்றிலும் போடுவர். பின்னர் பொலியை (நெல்) களவெட்டியின் மையத்தே குவித்து குறித்த உயரத்தில் வட்டமாகப் பரப்பி அதனைச் சுற்றி வைக்கோல் புரியினால் சுற்றி விடுவர். இது பூதங்கள் பொலியை அள்ளிவிடாமல் காவல் புரிகின்ற செயலாக கருதப்படுகின்றது. இதன் பின் சூடு அடிப்பதற்குப் பயன்படுத்திய வேலைக்காரன் முதலிய கருவிகளை பொலியின் மேலே போட்டுவிட்டுச் செல்வர். அன்று அதிகாலையில் சூடு அடித்தவர்களுக்கு விசேட உணவாக பாலப்பம் கொடுக்கப்படுவது வழக்கமாகும்.

மறுநாள் களவெட்டியினுள் பொலியைத் தூற்றுவதற்காக “அவுரி” எனப்படும் மூன்று கம்புகளாலும் வைக்கோலாலும் கட்டப்பட்ட உயரமான இருக்கைகள் இரண்டு கட்டப்படும். காற்று வீசத் தொடங்கியதும் எதிரெதிர் பக்கமாக இரு அவுரிகளையும் வைத்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவர் ஏறி நின்று இரு அவுரிக்கும் நடுவிலே தூற்றுவர்.

தூற்றி முடிந்ததும் மரைக்கால் எனப்படும் அளவையினால் நெல்லை அளந்து பட்டறை அல்லது சாக்கிலே கட்டுவர். பின்னர் வெட்டு, கட்டு, சூடடி, காவல் கூலியாக நெல் வழங்கப்படும். அவ்வேளையில் களவெட்டிக்கு வந்திருக்கின்ற வறுமைப்பட்ட, உழைப்பை - கணவனை இழந்த வயது முதிர்ந்த பெண்களுக்கு தருமங்கொடுக்கின்ற நிகழ்வும் இடம்பெறும்.

விளைந்த நெல்லை வீட்டினுள்ளோ அல்லது முற்றத்திலோ வைக்கோல், வைக்கோல் புரி என்பவற்றால் அமைக்கப் பட்ட பட்டறை எனப்படுகின்ற ஒரு வகைக் களஞ்சியத்தின் உள்ளே நிரப்பி நீண்ட காலம் பாதுகாப்பர்.

களவெட்டி வேலைகள் எல்லாம் முடிவடைந்த அன்றைய தினம் “களவெட்டிப் பொங்கல்” என்ற சடங்கு குறித்த களவெட்டியினுள் இரவு வேளையில் நிகழும். அன்றைய தினம் புமாதேவிக்குப் பொங்கல் படைத்து, வழிபாடு இயற்றி நன்றிக்கடன் செலுத்துவர். அப்போது அயல் வயல்காரர்கள், சூடு அடித்தவர்கள் முதலியோர் வருகைதந்து வழிபாட்டில் கலந்துகொண்டு பொங்கல் உண்டு மகிழ்வோடு செல்லும்போது, வைக்கோலினுள் பொங்கலை வைத்து அதனை ஒருவித முடிச்சாகக் கட்டிக் கொண்டு செல்வது மரபாகும்.

சூடடிப்பு முடிந்த பின்னர் ஒருவர் நிலவுரிமையாளரிடமிருந்து (போடியார்) நிலத்தைப் பெற்று வேளாண்மை செய்திருந்தால் அவர் அவ்வயலில் விளைந்த அரிசி, மற்றும் தயிர்ப்பானை, வாழைப்பழம் என்பவற்றை “கா”வில் (ஒருவகையான சுமந்து செல்லும் பாரம்பரிய முறை) சுமந்துகொண்டு கோடியாரின் வீட்டுக்குச் சென்று கொடுப்பது வழக்கமாகும். இப்பொருட்களை வைக்கோலால் செய்யப்பட்ட “புதிர்க்கோட்டை” எனப்படுகின்ற கொள்கலனில் வைத்தே கொண்டு செல்வர். அன்று அவருக்கு போடியாரின் வீட்டில் விருந்து பசாரம் நடைபெறும்.

பாரம்பரிய வேளாண்மைத் தொழில்சார் வழக்காறுகளின் சமூகப் பெறுமானம் பாரம்பரிய விவசாயச் செய்கை குறித்த கிராமத்தின் அல்லது அந்தச்சமூகத்தின் சமூக, கலாசார, பொரளாதார பேணுகையிலெ முக்கிய பங்கை ஆற்றி வந்திருக்கின்றது. அந்தவகையில் இச்செய்கையின் பல்வேறு கட்டங்களிலும் பின்பற்றப்பட்டுவந்த மத நடைமுறைகள், மக்களின் இறையுணர்வைப் பேணுவதிலும் அதனூடாகச் சமூகக் கட்டுப்பாட்டைப் பேணுவதிலும் முக்கிய பங்கைச் செலுத்திவந்துள்ளது. அதேவேளை அவர்களது கலை, அழகியல் உணர்வுகளை வெளிப்படுத்தவும் இந்த மத நடைமுறைகள் உதவின. கொம்புமுறி, வசந்தனாட்டம் என்பன இதற்குச் சிறந்த உதாரணங்கள். மட்டக்களப்பின் தனித்துவமான வழிபாட்டு மரபாகிய சடங்கு வழிபாட்டிற்கும் இவ்விவசாயச் செய்கையே மூலமாக அமைந்தது.

பாரம்பரிய விவசாயச் செய்கையில் சமய நிகழ்வுகள் மட்டுமன்றி விதைப்பு, களை பிடுங்குதல், நீர் பாய்ச்சுதல், காவல், அறுவடை, கட்டுதல், சூடடித்தல், தூற்றுதல் என்பனவெல்லாம் கிராம மக்களின் கூட்டு முயற்சிகளாகவே அமைந்தன. இவை சமூக ஒற்றுமைக்கு வழி வகுத்தன.

பாரம்பரிய விவசாயச் செய்கை மக்கள்சார் கலை இலக்கிய மரபொன்று தோன்றி வளர காலாகவும் அமைந்தது. மேற்கூறிய கலைகளோடு ஏர்ப்பாடல், பொலிப்பாடல், ஏற்றப்பாடல், கவிகள் முதலான பாடல்களை உள்ளடக்கிய வளமானதொரு வாய்மொழிப் பாடல் மரபொன்று இந்த விவசாயச் செய்கையினூடே மட்டக்களப்பிலே தோன்றி வளர்ந்து வந்திருக்கின்றது.

இவற்றுக்கெல்லாம் மேலாக வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்ட நிலவுடைமையாளர்களுக்கு மட்டுமன்றி கூலித் தொழிலாளர்கள், தொழிலை-கணவன்மாரை இழந்த பெண்கள், மாடு வளர்ப்போர், பெண்கள், வேறு தொண்டூழியங்கள் செய்வோர் என

ஒட்டுமொத்தக் கிராமத்தவருக்கும் சீவனோபாயத்தை வழங்குகின்ற ஒரு தொழில் துறையாகவும் அது அமைந்தது. வயலில் புல்லுப்பிடுங்கும் பணியில் பெரும்பாலும் பெண்ணள் ஈடுபட்டனர். கதிரைக் (உப்பட்டி) கட்டும்போது சிறுவர்கள், பெண்கள் கதிர்பொறுக்குவதில் ஈடுபட்டு நெல்லைச் சேகரித்தனர். களவெட்டியில் தருமம் பெறுவதற்காக வருகின்ற ஏழைகள், கணவனை இழந்த பெண்களுக்குத் தருமமாக நெல்லை வழங்கினார்கள். சூடடிப்புக் காலங்களில் பல பெண்கள் அப்பம் சுடுவதைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். அவர்கள் அப்பத்தைக் கொடுத்து நெல்லைப் பெற்றார்கள். நிலவுடைமை அற்ற சிலர் நிலவுடைமையாளர்களுக்கு (போடியார்) வெளாண்மைக்காரராக (முல்லைக்காரன்) இருந்தனர். போடிமார் தமது இலாபத்திற்கு ஏற்ப அவர்களுக்கு பெருந்தொகை நெல்லை ஊதியமாக வழங்குவர். இவற்றிற்கு மேலாக இவர்களுக்குப் போடியார் குறித்த நாள்களுக்கொருமுறை தாவரிப்புச் செலவாக “படி” (நெல்) கொடுப்பதும் வழக்கமாகும். சலவைத்தொழிலாளர், நாவிதர் ஆகியோர் தமது சேவைக்காக போக அறுவடையின் பின்னர் வேளாண்மை செய்தோரிடமிருந்து நெல்லைப் பெற்றனர். வண்டில்-மாடு வைத்திருப்போர் வேளாண்மைத் தொழிலை நம்பியே தம் தொழிலை நடத்தினர். வெட்டு, கட்டு, சூடடி, தூற்றுதல், மாட்டுக்கூலி என அனைத்துப் பணிகளுக்கும் நெல்லே வேதனமாகக் கொடுக்கப்பட்டது. எனவே ஒரு கிராமத்தில் அறுவடை முடிந்த பின்னர் அவ்வூரிலுள்ள அனைவரும் குறிப்பாக சீவனோபாயத்துக்கு வேண்டிய நெல்லைப் பெற்றுக்கொள்கின்ற வாய்ப்பைப் பாரம்பரிய வேளாண்மைச் செய்கை வழங்கியது.

இப்பிரதேசத்தில் மாடு வளர்ப்பு முக்கிய தொழிலாக இருப்பதற்கும் பாரம்பரிய வேளாண்மைச் செய்கையே மூல காரணமாகும். குறிப்பாக மாடுகளின் அத்தியாவசிய உணவான வைக்கோலை வேளாண்மைச் செய்கை வழங்கியது. குறிப்பாக மழைக் காவலங்களில் மேய்ச்சல் தடைப்படுகின்றபோது அவற்றின் சீவனோபாய உணவாக சேமித்துவைக்கப்படும் வைக்கோல் பயன்பட்டது. இதற்கும் அப்பால் தம் தொழிலுக்குப் பக்கபலமாக இருக்கும் மாடுகள் மீது அன்பும் கருணையும், காட்டுகின்ற மனியாயதச் சிந்தனையையும் பாரம்பரிய விவசாயச் செய்கையே வளர்த்தது. சூடு போடுதல், சேற்றுமிதிப்பு, உழுதல் முதலான தொழில்களின்போது அவற்றைக் கிராம மக்கள் மனிதநிலையில் வைத்தே நோக்கினார்கள். இந்த உணர்வின் உச்சத்தை தைப்பொங்கலை அடுத்து வரும் மாட்டுப் பொங்கலில் வெளிப்படுத்தினர்.

பாரம்பரிய விவசாயச் செய்கையினதும் அது சார்ந்த வழக்காறுகளினதும் சிதைவு 1970களின்பிற்கூற்றிலிருந்து கொண்டுவரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை பாரம்பரிய விவசாயச் செய்கையிலும் அது சார் வழக்காறுகளிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இப்பொருளாதாரக் கொள்கை காரணமாக ஏற்பட்ட தொழில்நுட்பக் கருவிகளின் பாவனை அதிகரிப்பு. விவசாயத்தை மையப்படுத்திய புதிய உற்பத்திக் கருவிகளின் வருகை மற்றும் வெளிநாட்டுப் பணியாளர்களாக செல்வதற்கான வாய்ப்பு அதிகரிப்பு முதலான காரணங்களால் பாரம்பரிய விவசாயச் செய்கையிலே மாற்றங்கள் ஏற்பட்டன. முக்கியமாக உழவு இயந்திரங்களதும் வேளாண்மை வெட்டும் இயந்திரங்களதும் வருகை, சூடடிப்பு விரிப்புகளின் அறிமுகம், இரசாயன மருந்து வகைகளது பரவல் என்பன பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தின.

இயந்திரப் பாவனை மனிதவலு, மிருகவலுப் பாவனையைக் கட்டுப்படுத்தியது. இது மேலே கூறிய பல்வேறு வழக்காறுகளையும் சிதைத்தது. விவசாயத்தை நம்பியிருந்த நிலமற்ற தொழிலாளர்கள், ஏழைகள், தம் சீவனோபாயப் பிழைப்பை இழந்தார்கள். விவசாயத்தை நம்பியிருந்த மாடு வளர்ப்போர் வருமானத்தை இழந்தனர். விவசாயத் தொழிலை நம்பி வண்டில்-மாடு வைத்துப் பிழைப்பு நடத்தியோர் தொழில் இழந்தார்கள். இந்நிலையில் கிராமங்களில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணியாட்களாகச் செல்லும் போக்கு அதிகரித்தது. மாடு வளர்ப்போர் மாடுகளின் உயிர்காக்கும் உணவான வைக்கோலைப் பயன்படுத்த முடியாமல் போனது. அறுவடை இயந்திரத்திலிருந்து வெளியேறும் வைக்கோலை மாடுகள் உண்ணாதநிலை ஏற்பட்டது. அவற்றைச் சேகரித்துப் பேணுவதிலும் சிரமம் ஏற்பட்டது.

மேலும், பாரம்பரிய தொழில் களங்கள் இல்லாமல் போனதால் அவற்றில் பயிலப்பட்டுவந்த வாய்மொழிப் பாடல்களின் பயில் களங்கள் இல்லாமல் போயின. கிராம மக்களின் அழகியல் உணர்வுகளின் வெளிப்பாட்டுக்கானவாயில்கள் அடைபட்டன.

இயந்திர சாதனங்களின் வருகையுடன் சூடடிப்பு விரிப்புகளின் அறிமுகமும் இணைந்து களவெட்டியையும் அதனோடு சேர்ந்த வழக்காறுகளையும் இல்லாது செய்தன. வயலில் களவெட்டி என்ற அடையாளமே இல்லாமல் போனது. பாரம்பரிய விவசாயச் செய்கையின் முதன்மையான வழக்காறுகள் களவெட்டியிலேயே வாழ்ந்தன. களவெட்டியின் சிதைவு நம் விவசாயப் பண்பாட்டின் முதன்மையானதொரு பகுதியின் இழப்பாக அமைந்தது. பாரம்பரிய வேளாண்மைச் செய்கையுடன் ஒன்றியிருந்த மதநம்பிக்கை வலுக்குன்றிப் போவதற்கு களவெட்டியின் சிதைவு முக்கிய பங்காற்றியது. மொத்தத்தில் சமூக இயங்கியலோடும் அதன் வாழ்வாதாரத் தோடும் இணைந்திருந்த பாரம்பரிய வேளாண்மைச் செய்கை, இன்று இலாப நோக்கத்தை மட்டும் கருதிய வர்த்தகத் தொழிலாக மாற்றமடைந்துள்ளது. அதே வேளை இந்த மரபுகளது இழப்பு நம்மை ஆரோக்கியமற்றவர்களாகவும் மாற்றியிருக்கின்றது. எனவே பின்பற்ற முடியுமான வேளாண்மைச் செய்கைசார் மரபுகளைக் கூடுமானவரை பின்பற்ற நாம் முனைய வேண்டும். அதற்கு நிறுவனம்சார் ஊக்குவிப்புகள் வழங்கப்படுவது அவசியமாகும். இதற்கும் மேலாக இத்தகைய மரபுகளை, அவை சார்ந்த பாரம்பரியக் கருவிகள், பொருட்களை ஆவவணப்படுத்துவதும் அவசியமாகும்.

### சான்றாதாரங்கள்

1. பாலசுந்தரம் பிள்ளை, இ.,2005, ஈழத்து நாட்டார் பாடல்கள்- ஆய்வும் மதிப்பீடும், சென்னை: மணிமேகலைப் பிரசுரம்.
2. நுஃமான், எம்.ஏ., 1980, “கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை முறைகளும் நாட்டார் வழக்குகளும் ஒரு பயன்நிலை ஆய்வு”, சிவத்தம்பி, கா.(பதி.), இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல், யாழ்ப்பாணம்: தமிழ்த்துறை வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### நேர்காணல்: (பெயர், வயது, தொழில், இடம் என்ற ஒழுங்கில்)

1. க.தேவானந்தம், 54, விவசாயம், மண்டூர்
2. கதிர்காமத்தம்பி,த., 72, இல்லை, கூலி, கரையாக்கன்தீவு.
3. நல்லரெத்தினம்,வை., 70, தரம் 4, விவசாயம், நாவற்காடு
4. வாலலெட்சுமி,க., 75, தரம் 9, வீட்டுவேலை, மண்டூர்.